# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 24 செவ்வாய்க்கிழமை 07.05.2024 கதிர் 181


# இலவச உயர் கல்வி முறையையே ஒழிக்க திட்டமிடுகிறது ஆளும் தரப்பு

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு எதிர்த்து அனைவரையும் திரளவும் அழைப்பு

இலங்கை மக்களுக்கு 85 வருட காலமாகத் தொடந்து கிட்டும் இலவச உயர் கல்வி முறையைஒழிக்கதற்போதைய ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்கிறதுஎன்றுநாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இந்தியாஇலங்கைக்குஎன்னதான் விழுந்தடித்து உதவிகளைச் செய்தாலும் சிங்களவர்கள் மத்தியில் புரையோடிப்போயுள்ள இந்தியா மீதான வெறுப்பு, காழ்ப்புணர்வு அவ்வளவு இலகுவில் மறைந்து விடாது என்பதை அண்மையில் கட்டுநாயக்காவில் நடந்த ஒரு உதாரணத்துடன் இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

நாட்டுக்குள் நுழைய முற்பட்பட இலங்கை இளைஞன் ஒருவர் கட்டுநாயக்காவில் குடிவரவு குடியகல்வு நடைமுறைகளுக்கு எதிராகக் காட்டுக் கத்தல் கத்தும் காணொலியையே அதற்கான உதாரணமாகக் காட்டியும் இருந்தேன். அந்த இளைஞரின் மனைவி வெளிநாட்டவர். இருவரும் நாட்டுக்கு வந்தபோது அவரது மனைவிக்கு விஸா வழங்க அதிகாரிகள் மறுத்து விட்டார்கள். அப்படி மறுத்துக் கருத்துக்கூறியவர் ஒரு இந்தியர் என்பதால், இலங்கையில் விஸா வழங்கும் நடவடிக்கையில் எப்படி இந்தியர்கள் ஈடுபடாலம் என்று தொடங்கி இந்தியர்களுக்கு எதிராக வன்மத்தைக் கக்கினார் அந்த ☞ 2

# கொழும்பில் தொழிற்றுறை கண்காட்சி

பல்வேறு நாடுகளையும் உள்ளடக்கியதாக ஜூன் மாதம் 'இன்டஸ்ட்ரீ எக்ஸ்போ -2024' என்ற தொழிற்றுறைக் கண்காட்சி கொழும்பில்நடத்தப்படவுள்ளதுஎன்று கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜூன் 19 -முதல் 23 வரை இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

'இன்டஸ்ட்ரி எக்ஸ்போ 2024' கண்காட்சியில் 25 கைத்தொழில் துறைகளைச் சேர்ந்த 1300க்கும் அதிகமானோர் பங்கேற்கவுள்ளனர்.

புதியஉற்பத்திகள்தொடர்பில் ☞ 2

# விஸா கட்டணங்களில் மாற்றம் ஏதுமில்லை

வெளிநாட்டவர்கள் எமது நாட்டுக்கு வரும் போது 30 நாள் விசா அனுமதிக்காகஅறவிடப் பட்ட 50 டொலர்கள் கட்டணத்தை மாற்ற மின்றி தொடர்ந்தும் பேண அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்தியா, சீனா, ரஷ்யா, ஜப்பான் , மலேசியா, தாய்லாந்து மற்றும்இந்தோனேசியா ஆகிய ஏழு நாடுகளுக்கு இதுவரை வழங்கப் பட்ட இலவச விசா சேவையை தொடர்ந்து நடைமுறைப்படுத் துவதற்கும்தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மேலும், வெளி நாட்டவர் ஒருவர் நாட்டிற்குள் நுழையும் போது அதற்கான விசா விநியோகிக்கும் முழுப் பொறுப்பையும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஏற்கும்.

சுற்றுலாத் துறை நாட்டுக்குள் புத்துயிர் பெற்றுவரும் நிலையில் வெளிநாட்டவர்கள் இலங்கைக்குவருகின்ற வேளையில் ☞ 2

# போதனா வைத்தியசாலைகள் பற்றிய போலிப் பரப்புரைகளை நம்பாதீர்கள்

## சுகாதார அமைச்சர் வேண்டுகோள்

அரச போதனா வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைகள் வெற்றியளிப்பதில்லை என்பது போலிப் பரப்புரை என்று சுகாதார அமைச்சர்வைத்தியர்ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதனா வைத்திய சாலைகளில் முன்னெடுக்கப்படும் சத்திர சிகிச்சைகள் வெற்றியளிப் ☞ 2

# 5 வருடங்களின் பின் நேற்று சு.க. அலுவலகத்தில் சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநயாக்க குமாரதுங்கள ஐந்து வருடங்களின் பின்னர் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு வருகை தந்தார்.

ஏற்கனவே அவருடைய அணியிருக்கும்மைத்திரிபால சிறிசேனவின் அணியிரும் கட்சியில் பதவிகளை வகிப்பதற்கு நீதிமன்றம் இடைக்கால உத்தரவினை வழங்கியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் அலுவலகத்திற்குள் அவர்கள் நுழையக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சந்திரிகா அம்மையார் நேற்றையதினம் ☞ 2

# மே 15க்கு முன் நாடாளுமன்றை கலைக்க ரணிலுக்கு அழுத்தம்

## பெரமுன வழங்குகிறது என்கிறார் கம்மன்பில

மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக நாடாளுமன்றத்தினைக் கலைக்குமாறு பொது ஜன பெரமுன ஜனாதிபதிக்கு அழுத்தம் விடுத்து வருவதாக பிவித்துரு ஹெல உறுமய வின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

எமக்குகிடைத்துள்ள தகவல்களின்படி மே 15 திகதிக்கு முன்னதாக நாடாளுமன்றத்தினைக் கலைக்கமாறு ஜனாதிபதிக்கு பொது ஜன பெரமுனவின் தலைவர்கள் அழுத்தமளித்து வருகின்றார்கள்.

அதன் காரணமாகவே மே 15க்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப் படலாம் என்ற விடயம் தேசிய அச்சு ஊடகங்களில் முக்கிய விடயமாக மாறியுள்ளது.

பொது ஜன ☞ 2

# சிங்கப்பூர் போன்று மாறவேண்டின் அதற்கான நடவடிக்கைகள் தேவை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

சிங்கப்பூர் போன்று மாறவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது அதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஆட்சிமாற்றம் ☞ 8

# கோடரியால் கொத்தி பிளந்து வவுனியாவில் ஒரு கொலை

## மாமன் சாவு: மருமகன் மீது பழி

வவுனியா, மதுரா நகரில் கோடரியால் கொத்தப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தமாகேன்என்பவர் உயிரிழந்தார். அவரது மருமகனே அவரைக் கொத்திக் கொன்றார் என்று கூறப்படுகின்றது. பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

கொல்லப்பட்டவரும் கொலையைச்செய்தவர் எனக் கூறப்படுபவரும் ஒரேவீட்டிலேயேவசித்து வந்தனர். இருவருக்கும் இடையில் முன்பகை இருந்து வந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில்நேற்றுமாலை வெளியிலிருந்து வீடு திரும்பிய மாமனை மருமகன் கோடரியால் கொத்திஎறிந்தார்என்றும் சொல்லப்படுகின்றது.

இதில் ☞ 2

# கடத்தப்பட்ட மீனவர்களை அழைத்து வர நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

சோமாலியக் கடற்றொழிலாளர்களால் கடத்தப்பட்டு தற்போது சீசெல்ஸ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களைமீட்பதற்கான அனைத்து இராஜதந்திர மட்டத்திலான ஏற்பாடுகளும்பூர்த்தியடைந்துள்ளதாகவும்எதிர்வரும்சில நாட்களில் அவர்கள் இலங்கைக்குஅழைத்து வரப்படுவார்களெனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சில மாங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து'லொரென்சோ புத்தா- ஷ- 04' எனும் ஆழ்கடல்மீன்பிடிப்படகில் கடற்றொழில்மேற்கொள்வதற்காக புறப்பட்ட 6 இலங்கை மீனவர்கள் சர்வதேச கடற்பரப்பில் வைத்து சோமாலியக் கடற்கொள்ளையர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டனர். இலங்கை அதிகாரிகள் துரிதமாகசெயற்பட்டதன் காரணமாக சீசெல்ஸ் கரையோரக் காவற்படை மற்றும் கடற்படையினரால் ☞ 2

# அயலுறவுத்துறை அமைச்சையும் வழக்கில் சேர்க்கக் கோரிக்கை

இந்தியமீனவர்களின் சட்டவிரோத இழுவை மடிப்படகுகள் தொடர்பான விடயத்தில் அயலுறவுத்துறை அமைச்சையும் ஒரு தரப்பாக இணைத்துக்கொள்ள வேண்டும் என்று உயர் நீதிமன்றில் சட்டமா அதிபரால் கோரப்பட்டுள்ளது.

இந்திய மீனுவர்களின் சட்டவிரோத இழுவைமடிப்படகுகள் பாவைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வடக்கு மாகாண ☞ 2

# பொருளாதார விவாதத்திற்கு நான் எப்போதும் தயார்தான்

## ஜேவிபிக்கு சஜித் மீண்டும் பகிரங்கமாக அறிவிப்பு

இலங்கையின் பொருளாதாரமீட்சிதொடர்பான எந்தவொரு விவாதத்திற்கும் தானும் தனது கட்சியின் பொருளாதாரக் குழுவினரும் தயாராகவே இருக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸதெரிவித்தார். ஜேவிபிதலைவர்மற்றும் அந்தக் கட்சியின் பொருளாதாரக்குழுவுடன் விவாதங்களை நடத்துவது குறித்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல்தொழிநுட்ப ☞ 2

## இனி இது .....

இளைஞர்.

வேடிக்கை என்னவென்றால் அவர்அப்படிக்கத்துவதை இலங்கை அதிகாரிகள்சிலரேகாணொலியாகப் பதிவு செய்து வெளியே கசிய விட்டனர். அதைப் பார்த்ததும் சிங்களவர்கள்மத்தியிலான இந்திய எதிர்ப்புணர்வுபற்றிக்கொண்டுளிய, சமூக ஊடகங்கள் அனைத்தும் இந்தியாவுக்கும் ஆளும்தரப்புக்கும் எதிராகக் கொந்தளித்தன. விஸா வழங்கும் நடவடிக்கைகளை எப்படி இந்தியர்களிடம் கையளிக்க முடியும் என்று ஆளாளுக்கு கோபத்தை கொட்டித் தீர்க்க, இப்போது இந்த விவகாரம் அமைச்சரவைக் கூட்டம் வரைக்கும் வந்துள்ளது.

அது மட்டுமல்ல அப்படி விமான நிலையத்தில் நின்று கத்திய இளைஞருக்கு எதிராகவும் அவர் கத்துவதை காணொலியில் பதிவு செய்து வெளியிட்ட அதிகாரிக்கும் எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் அறிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அவர் ஒரு நீண்ட விளக்கமே வழங்கியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் விசா விநியோக பிரிவில் மே முதலாம் திகதி அமைதியற்ற தன்மை நிலவியது. விமான நிலையத்தின் வளாகத்தில் ஆவேசமாக பேசி சண்டித்தனம் காட்டிய இளைஞனின் காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகி அது தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து விசாவிநியோகிக்கும்பொறுப்புஇந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற தவறான நிலைப்பாடு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இளைஞர் மே1 கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசா விநியோக பிரிவுக்கு தனது மனைவியுடன் வந்தார். இவரது மனைவிக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது.

வி.எப்.எஸ்.குளோபல் நிறுவனத்துடனான இருதரப்பு சேவை மே 1 ஆரம்பமானபோது கட்டார் நாட்டில் உள்ள இந்நிறுவனத்தின் கிளைக் காரியாலயத்தின் உப தலைவர் கட்டுநாயக்கவிமானநிலையத்துக்கு வருகைதந்து, பணிசெயற்பாடுகளை பார்வையிட்டுள்ளார். இதன்போது இந்த இளைஞர் அவரிடம் சென்று தனது மனைவிக்கு விசா பெற்றுக்கொள்வது பற்றிப் பேசியுள்ளார்.

விசா விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்ததன் பின்னர் வி.எப்.எஸ். குளோபல் நிறுவனத்தின் கிளைக் காரியாலயத்தின் உப தலைவர், இந்த இளைஞரை வரிசையில் நிற்குமாறு குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னரே இவர்இந்தியர்கள்இங்குஉள்ளார்கள் என்று முறையற்ற கருத்துச் சொல்லியுள்ளார்.

விசா விநியோக பிரிவில் இந்தியர்கள் எவரும் பணியில் இருக்கவில்லை. 13 இலங்கையர்களே சேவையில் இருந்துள்ளார்கள்.

இந்தியர்கள், இந்தியர்கள் என்று விமர்சனங்களை முன்வைக்கும் தரப்பினர்அனைவரும்இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை வாங்குவதை மறுக்கவில்லை. கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒருசில அதிகாரிகள் முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார். அவரது கருத்துக்களில் இருந்தே சிங்களவர்கள் மத்தியில் காணப்படும் இந்திய எதிர்ப்புணர்வு எந்தளவிற்கு ஆளும் தரப்புக்குத் தலையிடி கொடுக்கிறது என்பது புலனாகும்.

அமைச்சர்மட்டுமல்லவி.எச்.எவ். நிறுவனமும் இது தொடர்பில் விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்தளவிற்கு இந்திய எதிர்ப்புணர்வு பெரு நெருப்பாகப் பற்றி எரிகிறது. இந்தியா என்னதான்வி-முந்தடித்துக்கொண்டு சிங்களவர்களுக்கு உதவிகளை வழங்கினாலும் அது அவர்களின் மனங்களில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தப்போவதில்லை என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சிறு உதாரணம். இலங்கையில் தமது உண்மையான நண்பர்கள் யார் என்பதை இந்திய அதிகாரிகள் இனியாவது உணர்வார்களா என்றால், இராஜதந்திரத்தின் பேரால் அதற்கு "இல்லை" என்பதே பதிலாகக் கிடைக்கும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலவச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசும்போ-து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலவசக் கல்வி என்பது நாட்டில் உள்ள அனைவரும் அனுபவிக்கும் ஒன்று. தொடர்ந்து 85 வருட காலமாக இந்த உரிமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. அத்துடன், கஷ்டப் பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு வரும் மாணவர்களின் வாழ்க்கையை வெற்றியடையச் செய்வதற்கு பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்வி பெரும் உதவியாக அமைந்திருந்தது. இந்த உரிமைக்கு இப்போது சவால் விடுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் கடுமையான மாற்றங்களை மேற்கொள்ளும் முன்மொழிவுகளை ஆளும் தரப்பு முன்வைத்துள்ளது. இந்த முன்மொழிவுகளின் சாராம்சம் தான் உயர்கல்வித் துறையிலிருந்து அரசு விலகுவதாகும். உயர்கல்விக்கான பொறுப்பை நேரடியாக ஏற்றுக் கொள்ள தற்போதைய ஆளும் தரப்புத் தயாராக இல்லை. இதனால் உள்ளோர் இல்லாதோர் இடைவெளி கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. இளைஞர்களின் விரக்திப் போக்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

ஆளும்தரப்புக் கொண்டு வந்துள்ள பிரேரணைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாதொழிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல முக்கிய செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. பல்கலைக்கழக கட்டமைப்பின் கல்வித் தரத்தைப் பாதுகாப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். உயர் கல்விக்கான முன்மொழிவுகளை ஆளும்தரப்புக் கொண்டு வந்தாலும், அவை நேர்மையான முன்மொழிவுகள் அல்ல.

அத்துடன், வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கி, அவர்களை நாட்டிற்கு அழைத்து வந்து, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறச் செய்து, அவர்களுக்கு இலங்கையில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தையும் ஆளும் தரப்புத் தயாரித்துள்ளது.

இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். அவர்களுக்கு முன்னுரிமை வழங்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த முயற்சியை முறியடிக்க பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒன்றுதிரள வேண்டும். உயர்கல்வியை இல்லாதொழிக்க இந்த மக்கள் ஆணை இல்லாத ஆளும் தரப்புக்கு இடமளிக்கக் கூடாது என்றார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத்திட்டத்தின் கீழ், 177 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் பியகம, பொல்லேகல மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, இப்பாடசாலையின் நூலகத்திற்குத் தேவையான ஆங்கில நூல்களை கொள்வனவு செய்வதற்காக ஒரு இலட்சம் ரூபா பணத்தையும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரிடம் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில், ஜே. ஆர். ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தனவும் கலந்துகொண்டிருந்தார்.

அங்கு எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை ஆள்பவன் ஒரு தற்காலிக பொறுப்பாளனே. எனவே முட்டாள்தனமான கொள்கைகளில் இருந்து விலகி யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். யாரேனும் நல்லது செய்தால் நல்லது என்று கூற வேண்டும். எதிர்க்கட்சியோ அல்லது வேறு யாரேனும் நாட்டுக்கு நல்லது செய்தால் அதை பாராட்ட வேண்டும்.

நான் பேசும் விவாதங்களுக்கும் அ-துபோலவே செயலிலான விவாதங்களுக்கும் தயார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழு, தலைவர்கள் எந்த நேரத்திலும் விவாதத்திற்கு தயாராக உள்ளனர். பேசுவதோடு மாத்திரமல்லாது செயல் ரீதியிலான விவாதத்திற்கும் தாம் தயார் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டுக்கு தேவையான பணிகள், தீர்வுகள், பதில்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நாட்டுமக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

மதுவிலக்கு கொள்கையை கடைபிடிப்பவன் என்ற முறையில் மது, போதைப்பொருள், சிகரெட் என்பவற்றை நான் பகிர்ந்து வரவில்லை. உண்மையைப் பேசுவதால்தான் என்மீது அதிகமாகச் சேறு பூசப்படுவதில்லை.

நாட்டை வங்குரோத்து நிலைமையிலிருந்து விடுவித்து, மீண்டும் வங்குரோத்து நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்கான மூலோபாயங்கள் குறித்து யாரும் பேசுவதில்லை. தோல்வி கண்ட கம்யூனிஸ, மார்க்சிஸ சித்தாந்தங்களால் எமது நாட்டை கட்டியெழுப்ப முடியாது. தீவிர சோசலிஸவாதிகளின் பிள்ளைகள்கூட பணம் செலுத்தி படிக்கும் தனியார் பாடசாலைகளுக்கே செல்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். எந்தச் சூழ்நிலையிலும் நாம் அரசபாடசாலைகளை தனியார் மயமாக்க மாட்டோம்.

எமது நாட்டில் நடைமுறையில் இருந்து வந்த விசா வழங்கும் திட்டத்தை மாற்றியமைத்ததன் மூலம், சுற்றுலாவகளிடம் டொலர்களை அறவிட்டு, அந்த வருமானம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால், எமதுநாட்டுக்குகிடைக்கும் அதிக அளவிலான டொலர்களில் இழக்கப்படுகிறது. இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவதன் அடிப்படையும், நோக்கமும் என்னவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

தரவுகளை மையப்படுத்திய அறிவியல் ரீதியிலான பகுப்பாய்வுகளின் அடிப்படையிலயே இத்தகைய முடிவுகளை ஆளும் தரப்பு எடுக்க வேண்டும். நாட்டிற்கு நன்மை பயப்பதாக இது அமைய வேண்டும். இதன் சாதக, பாதகங்கள் குறித்தும், நன்மை தீமைகள் குறித்தும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். இது பிணைமுறி மோசடியைவிட பாரதூரமான நிதி மோசடி என பல்வேறு வதந்திகள் பரவி வரும் நிலையில், இது தொடர்பில் உண்மை நிலையை நாடு அறிய வேண்டும் என்றார்.

## போதனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில்லை என தெரிவிக்கப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. நாடளாவிய ரீதியிலுள்ள பெரும்பாலான போதனா வைத்தியசாலைகளில் ஆயிரக்கணக்கான சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

உலகில் இலவச சத்திர சிகிச்சைகளை வழங்கும் நாடுகள் பெருமளவில் இல்லை. ஆனால் இலங்கையில் சாதாரண காய்ச்சலுக்கான மருந்துவம் முதல் மூளை சத்திரசிக்சை வரை இலவசமான தரமான மருத்துவ, சுகாதார சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

கொவிட் காலத்திலுள் மிகவும் வெற்றிகரமாக தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உலகில் வளர்ச்சியடைந்த பல நாடுகளைவிட இலங்கை அதில் முன்னிலை வகித்தது. அந்த வகையில் இந்தக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தி முன்னெடுத்துக் கொண்டு செல்வதற்கு துறைசார்ந்தவர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலை என்பது மிகவும் சிறந்த சேவையை வழங்கும் ஒரு வைத்தியசாலையாகும். எனவே போதனா வைத்தியசாலைகள் தொடர்பில் தெரிவிக்கப்படும் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார்.

## விஸா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறவிடப்படும் விசா கட்டணத்தை தொடர்ச்சியாக 50 டொலர்கள் என்ற வரையறைக்குள் பேணுமாறு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தபோது சுற்றுலாத் துறையினர் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இது சுற்றுலாத்துறையின் எதிர்காலத்துக்கு பெரும் பக்கபலமாக அமையுமெனவும் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அதன்படி இந்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சரவையில் சமர்பித்த பின்னர் அமைச்சரவை அதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

## அயலுறவுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழிலாளர்கள், சுற்றாடல் நீதிக்கான மையம் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் மீறல் சம்பந்தமான மனுவின் விசாரணையின்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை தொடர்பில் சட்டத்தரணி ரவீந்தரநாத் தாபரே தெரிவித்ததாவது:

இந்திய இழுவைமடிப்படிகுகள் சட்டவிரோதமாக பிரவேசித்து செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு காரணம் எமது கடற்பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்பதாகும்.

ஆகவே பாதுகாப்புப் படையையும், விமானப்படையையும் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக இணைத்துக்கொள்ளுமாறு மனுதாரர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். குறிப்பாக இலங்கை விமானப் படையினரை கடற்பகுதியை கண்காணிப்பதற்கும், சுற்றிவளைப்புக்களைச் செய்வதற்கும் பயன்படுத்துமாறு மனுதாரர்சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதால் அயலுறவுத்துறை அமைச்சையும் இந்த வழக்கின் ஒரு தரப்பாக இணைத்துக்கொள்ளுமாறு சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

அவருடைய கோரிக்கையுடன் இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றார்.

## மே 15க்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவின் பிரச்சினையை எம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டாலும் ஆளும் தரப்புப் பெரும் தோல்வியைச் சந்திக்கும்.

அதன் பின்னர் நடத்தப்படும் நாடாளுமன்ற தேர்தலில் பெரமுனவின் உறுப்பினர்கள் கட்டாயமாக வீட்டுக்குச் செல்வார்கள். அதன் காரணமாவே ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்றார்.

## கடத்தப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம் மீனவர்கள் மீட்கப்பட்டதுடன் கடற்கொள்ளையர்களும் கைது செய்யப்பட்டனர்.

தற்போது சீசெல்ஸ் துறைமுகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இம் மீனவர்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி நேற்றையதினம் மீனவர்களின் உறவினர்கள் அமைச்சரைச் சந்தித்து முறையிட்டனர். இந்தச் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்ததாவது,

மீனவர்களை அழைத்து வருவதில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்காக நான் வருத்தமடைகிறேன். இதுபோன்ற சம்பவமொன்றுக்கு இலங்கை முதல் தடவையாக முகங்கொடுத்துள்ளதால் இதிலுள்ள சட்டச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு இரு நாட்டு அதிகாரிகளுக்கும் கால அவகாசம் தேவையாக உள்ளது. எமது கடற்றொழிலாளர்களை மீட்பதற்கான அனைத்து இராஜதந்திர மட்டத்திலான ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. எதிர்வரும் சில நாட்களில் அவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார்கள்.

இவர்களை விடுவிப்பது தொடர்பில் அமைச்சரவையிலும் நான் பல முறை பேசியுள்ளேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் வெளிவிவகார அமைச்சுக்கும் உரிய அலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் இவர்களை எதிர்வரும் சில நாட்களில் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நயனா குமாரி சோமரத்ன, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்தை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரத்தியேக பிரிவு நிறுவப்படவுள்ளது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, வெளிநாட்டுத்தூதரங்கள், வணிகத்திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் இக்கண்காட்சியில் பங்கேற்கவுள்ளன. பெருமளவான வெளிநாட்டவர்கள் இதில் பங்கேற்கவுள்ளமை விசேட அம்சமாகும்.

கண்காட்சியை முன்னிட்டு ஜூன் 18ஆம் திகதி காலிமுகத்திடலிலிருந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் வரை விசேட வாகனப் பேரணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு ஜூன் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் 'நிலையான தொழில் வளர்ச்சிக்கான பசுமை தொழில் முயற்சி' எனும் தொனிப் பொருளில் முதலாவது சர்வதேச மாநாடு இடம்பெறவுள்ளதோடு, விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## 5 வருடங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் அலுவலகத்திற்குள் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டதோடு அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கட்சியின் தலைமையகத்திற்குள் பிரவேசித்தபோது பொலிஸார் அதற்குத் தடை ஏதும் விதிக்கவில்லை.

## கோடரியால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த மாமனாரை உறவினர்கள் வவுனியா வைத்தியசாகைகு தூக்கிக்கொண்டு விரைந்தனர். எனினும் அங்கு செல்வதற்கிடையில் அவரது உயிர் பிரிந்துவிட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்காண்டு வருகிறார்கள்.

(100)

## சிங்கப்பூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*ஏற்படும்போது பொருளாதாரக் கொள்கைகளும் மாறும் என்பதே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்*

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படவேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ் வலியுறுத்து



பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படும்போது சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்க முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் மது போதைக்கு எதிரான இயக்கம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தியது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துகொண்டார்.

'மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனையால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும்' என்ற தொனிப்பொருளில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை ஒரு சவாலான விடயமாக காணப்படுவதாக இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையால் பெண்கள் அதிகளவில் எதிர்நோக்கும் சவாலான நிலைமையை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் கூறினார்.

போதைப்பொருளுக்கு எதிராக பிரசாரம் செய்வதை விடுத்து, இளைஞர், யுவதிகளை மாற்று செயற்பாடுகளில் ஈடுபடுத்தி, அவர்களின் திறன்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்த ஆளுநர், அதற்காக தனது பணிப்புரைக்கமைய வடக்கு மாகாண விளையாட்டுத்துறை மற்றும் கலாசார திணைக்களம் ஆகியன இணைந்து கிராமிய மட்டத்தில் புதிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.



பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் வழங்கப்படும்போது சிறந்த மாற்றங்களை எதிர்பார்க்க முடியும். அதற்கமைய நிலையான பொருளாதாரத்தை பெற்றுக்கொள்வதற்கான புதிய திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் போதைப்பொருளானது குடும்பங்களின் அடிப்படையை சிதைத்துக்கொண்டிருக்கும் நிலையில், அதற்கு எதிராக செயற்பட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார். (05)

# மட்டக்களப்பு செங்கலடியில் நடந்த விபத்தில் ஐவர் காயம்



மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி பிரதான வீதி சந்தியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயடைந்த ஐவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை ஒரு மணியளவில் கல்முனையில் இருந்து மகரகம நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துசபைக்குச்சொந்தமான பஸ் இவ்வாறு செங்கலடி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதியின் தூக்கக்கலக்கத்தால் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியைவிட்டுவிலகிமின்கம்பத்துடன் மோதுண்டு வீதியோரம் இருந்த கடைத் தொகுதியிலும் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் சாரதி மற்றும் நடத்துநர் உள்ளிட்ட ஐவர் செங்கலடி மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட் டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ரூ. 40 லட்சம் செலவில் தாழ்வாரம் காரைதீவு வைத்தியசாலைக்கு

## மாகாண சுகாதார பணிப்பாளர் ஷகீலா அடிக்கல் நாட்டினார்





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவுவைத்தியசாலையில்சுமார் 4மில்லியன் ரூபா பெறுமதியான புதிய தாழ்வாரம் ஒன்றிற்கான



அடிக்கல் நாட்டப்பட்டது.

காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் நடராசா அருந்திரன் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீன் கலந்து சிறப்பித்தார் .

இதுபிரதானவீதிக்குஅருகில்உள்ளவைத்தியசாலை காணியில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தையும் பழைய கட்டடத்தொகுதியையும் இணைக்கும் வகையில் இது அமைக்கப்படவுள்ளது.

இது நிர்மாணிக்கப்பட்ட பின்னர் புதிய கட்டடம் வெளிநோயாளர் பிரிவாக பயன்படுத்தப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த அடிக்கல் நாட்டு நிகழ்வில் வைத்தியர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)

# 40 வருடங்கள் கல்விச் சேவையாற்றிய பணிப்பாளர் அமீர் ஓய்வுபெறுகிறார்



(வி.ரி.சகாதேவராஜா)

40 வருடங்கள் கல்விச் சேவை யாற்றிய மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

ஆரவாரமின்றி ஓய்வுநிலைக்கு சென்ற மருதமுனையைச் சேர்ந்த எஸ்.எம்.எம்.அமீர் 1964 மார்ச் மாதம் 23 அன்று பிறந்தவர். சிவத்த மரைக்கார் முகம்மது அமீர், இயல்பிலேயே சாந்தமான குணம்கொண்டவர். பேசுவதற்கும், பழகுவதற்கும் இனிமையானவர்.

1984 இல் அமீர் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றார். பொருளியல் பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்க இவரிடம் செல்வதுண்டு.

இலங்கை கல்வி நிருவாக சேவைப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று தன்னை ஓர் கல்வி அதிகாரியாகத் தரமுயர்த்திக் கொண்டார்.ஆசிரியராக திட்டமிடல் மற்றும் மீளாய்வு பிரதிக்கல்விப் பணிப்பாளராக அதிபராக கல்வித் துறையில் தன்னை அர்ப்பணித்த அவர் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளரானார்.

பின்னர் மட்டக்களப்பு மத்திய கல்விவலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக இறுதி இரு வருடங்கள் இருந்து ஓய்வுபெற்றார்.

தன்சேவைக்காலத்தில்தன்னடக்கத்துடன்மிகமென்மையாகநடந்து கொண்ட கல்வியதிகாரிகளுள் அமீரும் ஒருவராவார்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலவச உயர் கல்வி முறையை ஒழிக்க ஒருபோதும் இடமளிக்கமுடியாது

இலங்கை அரசால் தற்போது வழங்கப்பட்டுவரும் இலவச உயர் கல்வி முறையில் இருந்து அரசு விலகுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டு அதிகளவில் அக்கறைக்குரியது.

''கல்வித்துறையில் கடுமையான மாற்றங்களை மேற்கொள்ளும் முன்மொழிவுகளை ஆளும் தரப்பு முன்வைத்துள்ளது. இந்த முன்மொழிவுகளின் சாராம்சம்தான் உயர் கல்வித் துறையிலிருந்து அரசு விலகுவதாகும். உயர்கல்விக்கான பொறுப்பை நேரடியாக ஏற்றுக்கொள்ள தற்போதைய ஆளும் தரப்புத் தயாராக இல்லை. இதனால் உள்ளோர் இல்லாதோர் இடைவெளி கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. இளைஞர்களின் விரக்திப் போக்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளது'' என்று பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

இலவசக் கல்வி என்பது நாட்டில் உள்ள அனைவரும் அனுபவிக்கும் ஒன்று. தொடர்ந்து 85 வருட காலமாக இந்த உரிமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. அத்துடன், கஷ்டப் பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு வரும் மாணவர்களின் வாழ்க்கையை வெற்றியடையச் செய்வதற்கு பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்வி பெரும் உதவியாக அமைந்திருந்தது. இந்த உரிமைக்கு இப்போது சவால்விடுக்கப்பட்டுள்ளது -என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கி, அவர்களை நாட்டிற்கு அழைத்து வந்து, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறச் செய்து, அவர்களுக்கு இலங்கையில் வேலை வாய்ப்பு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தையும் ஆளும் தரப்புத் தயாரித்துள்ளது என்றும் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

அவரது கருத்துக்கள் பெரும் அபாய அறிவிப்பாக உள்ளன. அதன் மீது அனைவரது கவனமும் குவிக்கப்படவேண்டியது அவசியம். ஆளும் தரப்பு உயர் கல்வித்துறையில் தனியார் நிறுவனங்களையும் அனுமதிப்பது வேறு, உயர் கல்வித்துறையில் இருந்து முற்றாக விலகுவது என்பது வேறு. கல்வித்துறையில் தனியார் நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலம் மேலும் பல மாணவர்கள் மருத்துவப் படிப்பு உட்பட உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகும் என்பது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்றாலும், உயர் கவித்துறையில் இருந்து அரசு விலகுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்குவதைக் காட்டிலும் கல்விக்குக் குறைந்தளவு நிதியையே ஒதுக்கும் இலங்கை, உயர் கல்வித்துறையை அரசுக்குப் பாரமாகக் கருத முடியாது. அப்படிக் கருதினால் பாதுகாப்புச் செலவைக் குறைத்து அந்த நிதியை இலவச உயர் கல்வித்துறையைத் தொடர்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதைவிடுத்து இலவச உயர் கல்வித்துறையில் இருந்து விலகிச்செல்ல முடிவெடுக்கக்கூடாது.

அதேபோன்று, இலங்கையில் அதிகஎண்ணிக்கையிலான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். அவர்களுக்கே உரிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க முடியாதுள்ள ஆட்சியாளர்கள், வெளிநாட்டவர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வெளிநாட்டவர்கள் உயர் கல்வியை இலங்கையில் தொடர அனுமதிப்பதன் மூலம் டொலர் வருமானம் கிடைக்கும் என்ற ஆளும் தரப்பின் எதிர்பார்ப்புக்கு மாறாக அதன் இந்தத் திட்டம் இருக்கின்றது. இதுவும் ஏற்புடையதாகாது.

இந்த முயற்சியை முறியடிக்க பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்கிற பீரிஸின் கோரிக்கை நியாயமானதே. இலவச உயர் கல்வியை ஒழிக்க இந்த ஆளும் தரப்பு முயற்சிக்குமாக இருந்தால் அதற்கெதிராக, அந்த முயற்சியை ஆளும் தரப்புக் கைவிடும் வரைக்கும் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபடுவது அவசியம்.

# சர்வதேச நீதிமன்றத்தினால் இஸ்ரேல் பிரதமருக்கு பிடியாணை

## போர்க்குற்ற விசாரணைக்கு இஸ்ரேல் உடன்படுமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



போர் குற்றம், தீவிரவாதம், ஆக்கிரமிப்பு உள்ளிட்ட விவகாரங்களை விசாரித்து வரும் இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், 1990களில் உருவானது.

**சர்வதேச நீதிமன்றமும் இனப் படுகொலையும்:**

இதில் உறுப்பினராக இருக்கும் நாடுகளுக்கு மட்டுமே, அந்த நீதிமன்றத்தின் உத்தரவுகள் பொருந்தும். சில ஆண்டுக்கு முன்னர், இந்த நீதிமன்றம், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக ஒரு உத்தரவை பிறப்பித்தது. இதனையடுத்து, உடனே அமெரிக்கா அந்த நீதிமன்ற உறுப்புரிமையிலிருந்து விலகியது.

அதேபோல், அந்த நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் யாரும் அமெரிக்காவிற்கு வரக்கூடாது என்றும் கூறியது. இதனையடுத்து, இஸ்ரேல் பிரதமர் மீதான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இந்த முடிவை அமெரிக்காவால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவை அழிக்கும் நோக்கோடு உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உளரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது.

என்றும் இதனை அமெரிக்கா தடுக்கும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்தோடு, பாலஸ்தீனம் உடனான போரில் அதிகமான சட்டவிதி மீறல்கள் இடம் பெற்றுள்ளதாகவும், இவ்வாறானதொரு போருக்கே அவசியம் இல்லை என்றும் சர்வதேச நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் போரில் 34000 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதுடன் அதில், பெண்களும், குழந்தைகளுமே அதிகளவில் உள்ளடங்குகின்றனர்.

**வீட்டோவும் அமெரிக்காவும்:**

போர் நிறுத்தத்தைக் கோரி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் (United Nations Security Council, UNSC) பாலஸ்தீன ஆதரவு நாடுகளின் தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்கா மற்றும் பிரித்தானியா தடுத்து நிறுத்தி வருகின்றன.




இஸ்ரேல் மீது தொடரும் இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் எனவே சர்வதேச நீதிமன்றம் இந்தப் போர்க்குற்றம் பற்றி விசாரிக்க முடியும் எனவும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் எனவும், போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் தென்ஆப்பிரிக்கா விடுத்த கோரிக்கை குறித்து சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள் எதுவும் தெரிவிக்க வில்லை. இந்நிலையில், இனப்படுகொலை




ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப்படுகொலையாகப் பார்க்கப்படுகிறது.

இனப்படுகொலை சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

**நெதன்யாகு கைது ?**

அமெரிக்கா தனது நட்பு நடான இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கைது செய்ய சர்வதேச நீதிமன்றத்தினால் (International Court of Justice) பிடியாணை பிறப்பிக்கப்படவிருப்பது தொடர்பில் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு (Benjamin Netanyahu) போர் குற்றத்தின் காரணமாக விரைவில் கைது செய்யப்படுவார்

குற்றச்சாட்டு தவறானது என தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தங்களது தரப்பு நியாயத்தை ஏற்க மறுத்துள்ளனர் என்று குற்றம்சாட்டியுள்ளார்.

**ஐநா பணியாளர்கள் கொலை:**

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்னர் ஐநா பணியாளர்களை ஏற்றிச் சென்ற வாகனம் மீது இஸ்ரேல், வான்வழி தாக்குதல் நடத்தியதில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். எனவே, உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று உலகநாடுகள் தீவிரமாக வலியுறுத்தத் தொடங்கின.

இதுநாள்வரை இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்ற அமெரிக்கா கூட, உடனடியாக போரை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

ஆனால், இஸ்ரேல் அதனை நிராகரித்து வந்தது. இதுவரை போரில் 34 ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், காசாவுக்கு நிவாரண பொருட்கள் எதுவும் தராததால், குடிதண்ணீர் பஞ்சம், உணவுப் பஞ்சம் என அனைத்தும் தலை தூக்கி நிற்கின்றன. இதனால் தொற்று நோய் பாதிப்புகள் ஏற்பட்டு ஏராளமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையான பாக்ஜலசந்தி கடலை 10 மணிநேரம் 10 நிமிடங்களில் நீந்திகடந்து சாதனை

## 12 வீரர்கள் படைப்பு









தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை பாக்ஜலசந்தி கடலை 10 மணிநேரம் 10 நிமிடங்களில் 12 நீச்சல் வீரர்கள், வீராங்கனைகள் தொடர் ஓட்ட முறையில் நீந்தி சாதனை படைத்தனர்.

இந்தியாவின் மகாராஸ்ட்ரா மாநிலம், தானே பகுதியில் செயற்பட்டுவரும் ராம் சேது திறந்த நீர் நீச்சல் அறக்கட்டளையை சேர்ந்த மகராஸ்ட்ரா மாநிலத்தின் 12 நீச்சல் வீராங்கனைகள் இரண்டு குழுக்களாக பிரிந்து தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை உள்ள சுமார் 30 கி.மீ தொலைவிலான பாக்ஜலசந்தி கடற்பரப்பை நீந்திக்; கடப்பதற்காக இந்தியவெளியுறவுத்துறை, இலங்கைதூதரகம் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகத்துக்கு அனுமதி கோரியிருந்தனர்.

இந்தியா-இலங்கைஇருநாட்டுஅனுமதியும் கிடைத்தநிலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் ராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து இரண்டுபடகுகளில்தங்கள்நீச்சல்பயிற்சியாளர் தலைமையில் மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினர் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

தலைமன்னாரிலிருந்து சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு கடலில் குதித்து தொடர் ஓட்ட முறையில் நீந்தத் தொடங்கி 12 பேரும் மாலை 4.40 மணியளவில் (10 மணி நேரம் 20 நிமிடங்களில் நீந்தி) தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியை சென்றடைந்தனர்.

கடலில் நீந்தி சாதனை படைத்தவர்களை சுங்கத்துறை, மரைன் பொலிஸார், சுற்றுலாப்பயணிகள் அரிச்சல்முனையில் வரவேற்றனர்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chiken Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# யாழ்ப்பாணம் வந்தார் நடிகர் பாண்டியராஜன்



தென்னிந்திய நடிகரும் இயக்குநருமான ஆர். பாண்டியராஜன் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்குவருகைதந்தார்.

அவர் யாழ்ப்பாணம் கொழும்புத்துறைஇல. 199 சுண்டுக்குழியில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்ற சிறப்பு பட்டிமன்றத்தில் கலந்துகொண்டார்.




'மக்களுக்கு சினிமாவும் சீரியலும்வழிகாட்டுகிறதா?வழிமாறுகின்றதா?' என்றொரு தலைப்பிலும் 'இன்றையசூழ்நிலையில்பிறருக்கு உதவி செய்வது ஆபத்தே? ஆனந்தமே?' என்ற தலைப்பிலும் இருபட்டிமன்றங்கள்நடைபெற்றன.

இந்த பட்டிமன்றத்தைக் காண பல இடங்களிலும் இருந்து மக்கள் வருகை தந்தனர்.

இதில்கிருபாசாரதிபயிற்சிசாலை அதிபர் அ.கிருபாகரன், பட்டிமன்ற நடுவர் முனைவர் நெல்லை பி.சுப்பையா, கவிஞர் பிரிய நிலா உள்ளிட்ட பட்டிமன்ற பிரவாத அணிசேர் கலைஞர்கள் பலரும் பங்கெடுத்தனர். (05)

# கிராம உத்தியோகத்தர்கள் நேற்று சுகவீன விடுமுறை போராட்டம்

## மக்கள் பாதிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

கிராம உத்தியோகத்தர்களின் சுகவீன விடுமுறை காரணமாக பொது மக்கள் தினமாகிய நேற்று(திங்கட்கிழமை) பொது மக்கள் ஏமாற்றத்துடன் வீடு சென்றனர் .

நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்கள் இரண்டு நாள்கள் சுகயீன விடுமுறையை அறிவித்து, இன்று (புதன்கிழமை) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதை அடுத்தே, இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. தம்பலகாமம் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களும் சுகவீன விடுமுறையை முன்னெடுத்துள்ளனர். கிராம உத்தியோகத்தர்களைச் சந்திக்க தூர பிரதேசங்களில் இருந்து பிரதேச செயலகத்துக்கு சேவை பெற சென்ற மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர்.

வேதன அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.(05)

# மனைவியைக் கொல்வதற்காக கைக்குண்டுடன் வந்த கணவர்

## பிள்ளைகளை பிணைக் கைதிகளாகப் பிடித்தார்

ஹங்வெல்ல பகுதியில் தனது இரு பிள்ளைகளை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த தந்தையொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு ஹங்வெல்ல, ஜல்தாரா, அரச ஊழியர் வீட்டுத் தொகுதியில் வசிக்கும் நபர் ஒருவர், மனைவியைக் கொலைசெய்வதற்கு கைக்குண்டுடன் தனது வீட்டிற்கு வந்துள்ளார்.

எனினும் குறித்த பெண் வீட்டை விட்டு தப்பிச் சென்றதையடுத்து குறித்த நபர் தனது இரண்டு பிள்ளைகளையும்வீட்டின்அறையொன்றில்பிணையக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளார்.

இதனையடுத்து, ஹங்வெல்லபொலிஸ்அதிகாரிகள் குழு மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவின் அதிகாரிகள் குழு சம்பவ இடத்திற்குச் சென்று நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

சந்தேகநபரிடம்இரண்டுபிள்ளைகளையும்எதுவும் செய்யாமல் வெளியே அனுப்புமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்தனர். சந்தேக நபர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சுமார் ஒன்பது மணித்தியாலங்களின் பின்னர் வீட்டின் கதவுகளை உடைத்து பிள்ளைகளைப் பத்திரமாக மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பிள்ளைகளுக்கு சந்தேகநபர் சில தடுப்பூசிகளைச்செலுத்தியதால், இரண்டுபிள்ளைகளையும் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர் எனவும், சந்தேகநபர் வைத்திருந்த கைக்குண்டை செயலிழப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேகநபர் ஹங்வெல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



## சிங்கப்பூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக் காரணமாக இருந்து வந்துள்ளது. நாடு என்ற ரீதியில் வங்குரோத்து நிலையடைந்துள்ளமைக்கு இத்தகைய அரசியல் காரணிகளே பொறுப்புக் கூற வேண்டும்.

சிங்கப்பூர் போன்று மாற வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள்.ஆனால் அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இலங்கையின் விமான நிலைய கட்டமைப்பு,குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டமைப்பை பரிசீலனை செய்து சிறந்த திட்டங்களை முன்வைக்குமாறு சிங்கப்பூர் நாட்டின் குடிவரவு சோதனைச் சாவடிகள் அதிகார சபையிடம் வலியுறுத்தினேன்

இதற்கமைய இலங்கையின் விமானநிலையங்கள்,குடிவரவு மற்றும்குடியகல்வுதிணைக்கள கட்டமைப்பு ஆராய்வதற்கு சிங்கப்பூர் நாட்டின் குடிவரவு சோதனைச் சாவடிகள் அதிகார சபையின் ஐந்து அதிகாரிகள்மே27இலங்கைக்கு வருகை தரவுள்ளார்கள். இவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் வரை இங்கு தங்கியிருந்து ஆராய்வுகளை முன்னெடுப்பார்கள்.

சிங்கப்பூர் போல் மாற வேண்டும்என்று கனவுகண்டுக் கொண்டிருந்தால் மாத்திரம் போதாது அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். சிங்கப்பூர் அதிகார சபை குழுவினர் முன்வைக்கும் அறிக்கையைஅடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்சாம் வழங்கும் வேலைகள் ஆரம்பம்



(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட காலத் தேவைக்கான இவ்வேலைத் திட்டத்தின் மூலம் பல்தரப்பரப்பட்ட பொதுமக்கள் நன்மை பெறவுள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு முன்னாள் அமைச்சரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள சம்புநகர், மீலாத்நகர், ஆலம்குளம், தீகவாபி உள்ளிட்ட சில எல்லைப் புறக் கிராமங்களையும், அம்பாறை நகரையும் இணைக்கும் பாதையாகவும், விவசாயக் காணிகளுக்குச் செல்லும் மக்களின் பிரதான பாதையாகவுமுள்ள இவ்வீதி நீண்ட காலமாக இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் காணப்பட்டது.

இவ்வீதியின் ஒரு பகுதிக்கு பிரதேச சபை மூலம், இவ்வாறு மின்சாரம் வழங்கப்பட்டமையால் பெருந் தொகையான பொதுமக்கள் நன்மை பெறவுள்ளனர். இவ்வீதி மின்சார வசதியற்றுக் காணப்பட்ட கடந்த காலங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்பட்டதுடன், இரவு நேர வீதிப் போக்குவரத்தின் போது பல்வேறு விபத்துக்களும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த இந்த வீதிக்கான மின் இணைப்புவேலைத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, இப்பகுதியில் அமையப் பெற்றுள்ள கொல்களத்திற்கான நீர் இணைப்பையும் மக்கள் பாவனைக்காக ஆரம்பித்து வைத்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸின் முயற்சியாலும், தூர நோக்கு மிக்க எண்ணத்தாலும் மேற்கொள்ளப்பட்ட இவ்வேலைத் திட்டத்தை அரசியற் பிரமுகர்கள், திணைக்களத் தலைவர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் போன்றோர் மேலும் விஸ்தரித்து பொதுமக்கள் ஆண்டாண்டு காலம் நன்மை பெறும் வகையில் இவ்வேலைத் திட்டத்திற்கு உரமூட்ட வேண்டுமென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இவ்வீதி மூலம் பயணிப்போர் பல்வேறான இன்னல்களையும், இடையூறுகளையும் அனுபவித்து வந்தனர். காட்டு யானைகளின் அட்டகாசம், முதலைகள், பாம்புகள் போன்ற நீர்வாழ் உயிரினங்களின் அச்சுறுத்தல்கள், கட்டாக்காலிகளின் இடைஞ்சல்கள், வீதி விபத்துக்கள் என பல்வகை மக்கள் பாதுகாப்பற்ற விடயங்கள் நடந்தேறியுள்ளன.

இதேவேளை, எல்லைப்புறக் கிராமங்களில் வசித்து வரும் மக்கள் இரவு வேளைகளில் வைத்திய தேவைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு செல்லல், மரண வீடுகளுக்குச் செல்லல் மற்றும் இரவு நேர அவசரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல் போன்ற தேவைகளை மேற்கொள்வதற்கும் இப்பாதை இருளில் மூழ்கிக் காணப்பட்டமை மக்களுக்கு பெரும் சவாலைத் தோற்றுவித்தது எனலாம்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட தூர வீதி ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறது. இதனால் தாம் பெரிதும் நன்மை பெறுவதாகவும், இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கால்கோளாய் இருந்த பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் உள்ளிட்ட துறைசார்ந்தவர்களுக்கு தமது நன்றியறிதலை பிரதேச மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிகழ்வின்போது கலந்து கொண்ட அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டதுடன், அட்டாளைச்சேனை அபிவிருத்தி குறித்தும் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

இதன்போது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாளர் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரசியற் பிரமுகர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# 30 கிலோ கஞ்சாவுடன் இருவர் யாழ். வடமராட்சியில் கைது!



சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 30.5 கிலோகிராம் கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் வவுனியா பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் .

வவுனியாவில் உள்ள பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் .

கைது செய்யப்பட்டவர்கள் வடமராட்சி கிழக்கு பகுதியை சேர்ந்த 35,36 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபர்களை மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

(05)

# இரத்தினக் கற்களுடன் ஒருவர் விமான நிலையத்தில் கைது





இலங்கையிலிருந்து ஏராளமான இரத்தினக் கற்களை கடத்த முயன்ற நபரை விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னைக்குச் செல்ல முற்பட்ட வேளையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து காணப்பட்ட பயணப் பொதியில் 482.02 கிராம் நிறையுடைய பல்வேறு வகையான இரத்தினக் கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பரிசோதனை செய்யப்படும் இயந்திரங்களில் அகப்படாமல் இருக்க கார்பன் தாள்களில் அவை கவனமாகச் சுற்றப்பட்டிருந்தன எனப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர் .

குறித்த இரத்தினக் கற்கள் மற்றும் சந்தேக நபரை விமான நிலைய சுங்கப் பிரிவினரிடம் ஆஜர்படுத்திய பின்னர் மேலதிக விசாரணைகள் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பாதுகாப்பற்ற முறையில் சவப்பெட்டிகளை ஏற்றிச் சென்ற லொறியை பிடித்த பொலிஸ்



சவப்பெட்டிகளை லொறியில் பாதுகாப்பற்ற முறையில் ஏற்றிச் சென்ற லொறியின் சாரதி பண்டாரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரகம பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள், பண்டாரகம நகரில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த போது, இந்த லொறியை நிறுத்திச் சோதனையிட்டுள்ளனர் .

சோதனையில் சவப்பெட்டிகள் பாதுகாப்பற்ற முறையில் அடுக்கிக் காணப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட வாகன சாரதியிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது, பாணந்துறை பகுதியிலிருந்து முல்லைத்தீவுக்கு இந்த சவப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டன எனத் தெரிய வந்துள்ளது .

இந்த சவப்பெட்டிகள் ஆபத்தான முறையில் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் கீழ் சாரதியை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கிளிநொச்சியில் 4,026 மாணவர்கள் சாதாரண தர பரீட்சை எழுதுகின்றனர்





கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரண்டு கல்வி வலயங்களில் நேற்று ஆரம்பமாகியுள்ள கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்கு ஆர்வத்துடன் மாணவர்கள் வருகை தருவதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2024 ஆண்டு 33 பரீட்சை நிலையங்கள் 4026 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

பரீட்சை நிலையங்கள் இணைப்பு செய்யும் வகையில் 10 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு பரீட்சை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயம்.

பாடசாலை ரீதியாக 3519 பரீட்சார்த்திகள் 507 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 4026 பேரும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்

ஆலயங்களில் வழிபாடுகள் ஈடுபட்டதின் பின்னர் பரீட்சை நிலையங்களுக்கு சென்றதை எம்மால் அவதானிக்க முடிந்தது. (05 - 113)

# முன்னாள் முசலி பிரதேசசெயலர் கேதீஸ்வரன் மறைவுக்கு ரிஷாத் எம்.பி. ஆழ்ந்த அனுதாபம்

மன்னார் மாவட்ட மக்களின் நலனில் இனப்பாகுப்பாடுகளின்றி தமது காலத்தில் செயல்பட்ட ஒரு நல்ல மனிதரை இழந்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.

முன்னாள் முசலி பிரேதேச செயலாளர் செ.கேதீஸ்வரனின் மறைவு தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் கூறியிருப்பவை வருமாறு -

இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து, மெனிக்பார்ம் நலன்புரி முகாமுக்கு வந்தபோதும், அதன் பிற்பாடான மீள்குடியேற்றத்தின்போதும், இடப்பெயர்வுக்குள்ளாகி புத்தளத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களின் முசலி மீள்குடியேற்றத்திலும் இரவு, பகலாக சோர்வின்றி பணியாற்றியமை, அவரது மனித நேசத்தையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் உயர் குணத்தையும் வெளிக்காட்டியது.

அது மட்டுமல்லாமல், மீள்குடியேறும் மக்களின் காணிப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை என்பன தொடர்பில், பல தரப்புக்கள் பிழையான பார்வையினைக்கொண்டு, எதிர்ப்புக்களை வெளியிட்டு வந்த போதும் சரியான நிலைப்பாட்டில் நின்று, பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றுக்காக முன்னின்று செயலாற்றியவராக அமரர் கேதீஸ்வரன் இருந்துள்ளார்.

இவரது துணிவான செற்பாடுகளை ஜீரணித்துக்கொள்ள முடியாதவர்களின் அழுத்தம் காரணமாக, வட மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அமரர் கேதீஸ்வரன், மன உளைச்சலுடனேயே இருந்தார். இடமாற்றம் வழங்கப்பட்ட போதும் மன்னார் மாவட்ட மக்களின் நலன் தொடர்பில், எம்முடன் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பல விடயங்களைப் பகிர்ந்துகொள்ளும் சிந்தனை கொண்டவராக இருந்ததை, இந்த தருணத்தில் நினைவு கூருகின்றமை எமது பொறுப்பாகும். அவரது காலத்தில், மீள்குடியேற்ற விடயத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பை இன்றளவும் மறக்க முடியாததொன்றாகவே நான் பார்க்கின்றேன்.

அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும். அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொள்கின்றேன். - என்று குறிப்பிட்டுள்ளார். (05)

# அழுகிய நிலையில் சடலம் மீட்பு : அக்கரபத்தனையில் சம்பவம்

அக்கரபத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டொரிங்டன் தோட்டத்தின் மேற்பகுதியிலுள்ள வனப்பகுதியில் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்படுள்ளதாக அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வனப்பகுதிக்குள் ஞாயிற்றுக்கிழமை காலை சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர் .

இந்த சடலம் அடையாளம் காணமுடியாதவாறு அழுகிக் காணப்பட்டதுடன் அந்த பகுதியில் துர்நாற்றம் வீசியதாக பொலிஸார் தெரித்தனர் .

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை அக்கரபத்தனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# கூரிய ஆயுதத்தால் மாணவன் தாக்கி மற்றொரு மாணவன் உடலில் காயம்

வியங்கொடை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் இரு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என வியாங்கொடை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவனும் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவனும் ஒரே மாணவியுடன் கொண்டிருந்த காதல் உறவின் அடிப்படையில் இரு மாணவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது .

இந்த மாணவி தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவனுடன் காதல் உறவை ஏற்படுத்தியதையறிந்த தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவன் பாடசாலை முடிந்து வெளியே வரும்போது தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவனை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.(05)

# அறநெறி ஆக்கத்திறன் போட்டிகளில் சாதனையாளர் 40 பேர் கௌரவிப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய அறநெறி ஆக்கற்திறன் போட்டிகளில் சாதனை படைத்த 40 அறநெறி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வு திருக்கோவில் பாலக்குடா பாலவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையில் இடம்பெற்றது.



தேசிய ரீதியில் தெரிவான குருகுல மாணவன் ஜெயராஜா யுவராஜ் உள்ளிட்ட நாற்பது மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் நடத்தி வரும் 11 அறநெறிப் பாடசாலைகள் இணைந்து நாவுக்கரசர் பெருமானுடைய குரு பூசை தினத்தை சிறப்பாக நடத்திய போது இந்தக் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

குருகுல ஸ்தாபகர் பணிப்பாளர் கண.இராசரெட்ணம் தலைமையில் குருபூஜையும் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றன.

பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் த.உதயகுமார் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளும் கலந்து கொண்டனர்.

போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் பரிசு வழங்கப்பட்டது.

அறநெறி பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

# மாணவருக்கான தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை திருமலையில்






(ஹஸ்பர் ஏ.எச்)

பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் பயன்பெறும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை சனிக்கிழமை திருகோணமலை நகரசபை வளாகத்தில் உள்ள




நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் ஆரம்பித்து வைக்க இவ்வமர்வை வளவாளர் கணேஷ் சிறப்பான முறையில் நடத்தினார்.

இந்த அமர்வை பத்தாம் குறிச்சி அறிவு ஒளி மையத்தின் பணிப்பாளர் அஜித் குமார் உதயகுமார், ஆசிரியை செல்விடிலக்ஷிகா புகழ்வேந்தன் மற்றும் அறநெறி ஆசிரியை ஜெயவதணி இளங்கோவன் ஆகியோரால் ஒருங்கிணைப்பு செய்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஊடகப் பயிற்சி இறுதி அமர்வு

(தில்சாத் பர்வீஸ்)

ஆர்.ஜே. மீடியா ஊடக வலையமைப்பு மற்றும் எழுத்துச்சரம் சஞ்சிகை நாடளாவிய ரீதியில் வழங்கும்இரண்டுமாதகாலஊடகப் பயிற்சி நெறி பத்து அமர்வுகளாக சிறந்த வளவாளர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றது. இதில் செய்தி வாசிப்பு, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பு ,சமூக ஊடகங்களை உருவாக்குதலும் கையாளும் முறை, புகைப்படம் மற்றும் காணொளி செம்மையாக்கம் மற்றும்மேடைஅறிவிப்பு, ஏனைய ஊடகங்களை உள்ளடக்கிய கற்றல் பயிற்சி போன்றன கற்பிக்கப் படுகின்றன.

இதில் நாடளாவிய ரீதியில் பலரும் கலந்து கொண்டனர். இக் கற்கை நெறியின் இறுதியில் வழங்கப்படும் வானொலி நேரடிப் பயிற்சி மற்றும் கலை நிகழ்ச்சி முதலாம் மற்றும் இரண்டாம் குழுவை மையப்படுத்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கொத்மலை ஊடகப் பயிற்சி நிலையத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் மாணவர்களுக்கு வானொலிநேரடிப்பயிற்சிவழங்கப் பட்டது.மேலும்இரண்டுபகுதிகளைக்; கொண்ட இந்த அமர்வில் கலை

நிகழ்ச்சியும் மாணவர்களின் அனுபவப் பகிர்வும் முதலாம் மற்றும் இரண்டாம் குழு மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றன. இந் நிகழ்வின் முதன்மைஅதிதியாகஆர்ஜேமீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் சமூகப்பணி இளம் கலைமாணி மாணவரும் ஊடகத்துறையில் பல தேசிய விருதுகளை பெற்ற வானொலி அறிவிப்பாளரும் ஊடக பயிற்றுவிப்பாளருமான ஏ எம் இன்ஷாப் ,விசேட அதிதிகளாக அறிவிப்பாளரும் தேசிய கல்வி நிறுவகத்தின் 'அல்பா யூ' இணைய வானொலி தொகுப்பாளரும் ஊடக கற்கைகளுக்கான வளவாளரும் ஆசிரியருமானகேஎம்எம்.சர்ஜதீன், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன கொத்மலை ஊடகக் கற்கைகள் நிலையத்தின் இணைப்பாளர் கபில குமார அரத்தன, ஆர் ஜே மீடியா வலையமைப்பின் பிரதிப் பணிப்பாளரும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவியுமானபாத்திமாஅஸ்க்கியா முபாறக், ஆர்ஜே மீடியாவின்கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

சுமையா சுஹைப் மற்றும்

பெற்றோர்கள்எனபலரும்கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.(05)

## பேத்தியை காப்பாற்ற முயன்ற மூதாட்டி ஓட்டோ மோதி இறப்பு

ஓட்டோவில் மோதவிருந்த பேத்தியைக் காப்பாற்ற முயன்ற மூதாட்டி அதே ஓட்டோ மோதி உயிரிழந்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பெந்தோட்டை ரொபோல்கொட பகுதியில் மாலை நேர வகுப்புக்குச் சென்ற பேர்த்தியை அழைத்துவரும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பெந்தோட்டை ரொபோல்கொட பகுதியைச் சேர்ந்த 65 வயதான மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

ஓட்டோவைச் செலுத்திச் சென்ற பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் .

இந்த விபத்தில் ஓட்டோ சாரதியும் காயமடைந்து பொலிஸ் பாதுகாப்பில் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்










வவுனியா, புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் முன்னிலையில் தாக்கிய நபரை கைது செய்யுமாறு கோரி வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் முன்பாக நேற்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்புபோராட்டம்ஒன்றுமுன்னெடுக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளான நபர் உட்பட 40 இற்கும் மேற்பட்டோர் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் 'பொலிஸார் பக்கச்;சார்பாக செயற்படாது குழாய் கிணறு ராசனை கைது செய், பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து தாக்கியவருக்கு பாதுகாப்பு கொடுக்காதே, பொது மக்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீதும் நடவடிக்கை வேண்டும்' என பல்வேறு கோசங்களை எழுப்பினர்.

இதனையடுத்து, வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக 10 பேரை அழைத்து பேசியிருந்தார். இதன்போது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கிய வெளிநாட்டில் இருந்துவருகைதந்தநபரை 3 தினங்களுக்குள் கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததுடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட பொலிஸார் மீதும் விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றிருந்தனர்.

இதேவேளை, கடந்த மாதம் 15 ஆம் திகதி வவுனியா, சின்னப்பூவரசன்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையை புளியங்குளம் பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட ஏனைய பொலிசாரும் பிடித்து வைத்திருக்க, வெளிநாட்டில் இருந்து வருகைதந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்குள் வைத்து தாக்கியதாக பாதிக்கப்பட்டவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மெனிக்ஹின்ன வைத்தியசாலையில் சண்டை: மாவட்ட வைத்திய அதிகாரி கைதாகி பிணை

மெனிக்ஹின்னவைத்தியசாலையில்இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்தியஅதிகாரிபிணையில்விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான மாவட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றில் ஆஜர்படுத்தியதன் பின்னர், தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்குமாறு தெல்தெனிய மாவட்ட நீதிபதி திருமதி தேவிகா சி.ஜெயவர்தன உத்தரவிட்டுள்ளார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட மாவட்ட வைத்திய அதிகாரி டபிள்யூ.சி.கே.வீரப்பான எதிர்வரும் 8 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மாவட்ட நீதிபதி அறிவித்துள்ளார்.

மோதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வைத்தியசாலை ஊழியர்கள் மூவரையும் மற்றைய தரப்பினர் மூவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியதுடன், மாவட்ட நீதிபதி தலா இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்தார்.

மேலும், சம்பவம் தொடர்பில் மாவட்ட வைத்திய அதிகாரி கைது செய்யப்படவிருந்த நிலையில், அதற்குள் அவர் உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறி சட்டத்தரணி ஒருவரால் பொலிஸில் சரணடைந்த நிலையில் கடந்த வியாழனன்று அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறீ சபாரத்தினத்தின் நினைவு மன்னாரில்









தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் ஸ்ரீசபாரத்தினத்தின் 38 ஆவது நினைவுதினம் மன்னாரில் நேற்று (திங்கட்கிழமை) மாலை அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த நினைவு அஞ்சலி நிகழ்வு தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மறைந்த தலைவரின் திருவுருவப்படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் மாலை மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஈ.பி.ஈர்.எல்.எப்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் உட்பட பிரமுகர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓஎம்பி அலுவலகத்துக்கு பணிநிலை வெற்றிடங்கள்

செயற்பட ஆரம்பித்து ஆறு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் காணாமல் போன (காணாமல் ஆக்கப்பட்ட) ஒருவருக்குக்கூட என்ன நடந்தது என்பதைக் கண்டறியத் தவறியுள்ள காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் (ஓஎம்பீ) பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலமான, 2018 பெப்ரவரி மாதம், பணிகளை ஆரம்பித்த குறித்த அலுவலகம், காணாமல்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரைக்கூட இதுவரை கண்டுபிடிக்கவில்லை அல்லது அவருக்குஎன்னநடந்ததுஎன்ற உண்மையை வெளிப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வடக்கு, கிழக்கின் தாய்மார் முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் அலுவலகத்தின் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிகழ்வும் கண்டறிதல் அல்லது நுண்ணாய்வு, மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் மனிதாபிமான பதிலிறுப்பு ஆகிய துறைகளில் முன்னனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலும் காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இணையான தகைமைகளைக் கொண்டவர்களும் விண்ணப்பிக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் காணப்படும் துரித இணைப்பின் ஊடாக விண்ணப்பத்தைப் பெற்று மின்னஞ்சல் அல்லது தபால் மூலமாக மே 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் பதவி வெற்றிடம் குறித்த விளம்பரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போன பற்றிய அலுவலகத்தின் பெயரிலேயே சர்ச்சை காணப்படுவதாக தெரிவித்த பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் அலுவலகத்திற்கு ஆரம்பம் முதலே எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இறுதி யுத்தக் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் இலங்கை பாதுகாப்புத்தரப்பிடம்கையளிக்கப்பட்ட நிலையில் அல்லது சரணடைந்த நிலையில் காணாமல்போன தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனக் கேட்டு தாம் போராடுகின்ற நிலையில் காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகம் என்ற பெயரில் அலுவலம் ஒன்று இயங்குவதை விரும்பவில்லை என, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஜனவரி 4ஆம் திகதி யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க, காணாமல் போனோர் குறித்த முறைப்பாடுகளை விரைவில் விசாரணைசெய்யுமாறும், அடுத்த ஆறு மாதங்களுக்குள் அந்தப் பணிகளை நிறைவுசெய்ய காணாமல் போனோர் அலுவலகத்துடன் இணைந்து செயற்படுமாறும் வலியுறுத்தியிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2024இல் வெளியிடப்பெற்றது